செ.வெ.எண்: 757 26/10/09

<u>செய்தி வெளியீடு – 26.10.2009</u>

**கலைத்துறை மூலம் கிடைத்த தொகை 61 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாயை அருந்ததிய மாணவர்களின் உயர்கல்விக்காக முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்!**

****

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 'ஜெ நந்தினி ஆர்ட்ஸ்' தயாரிக்கும் "பெண் சிங்கம்" எனும் திரைப்படத்திற்காகத் தமக்கு அளிக்கப்பட்ட 50 இலட்சம் ரூபாய்; தமிழகத்திலுள்ள அருந்ததிய சமுதாய மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் சேர்ந்து படித்திடச் செலவிடப்படும் என அறிவித்தார்கள்.

2009–2010ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இட ஒதுக்கீட்டில், அருந்ததியருக்கு 3 சதவீத தனி உள்ஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. தனி இடஒதுக்கீட்டின் காரணமாக இந்த ஆண்டு, ஒற்றைச் சாளர முறையில், அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்த 56 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளிலும்; 1165 மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளிலும் கல்வி பயிலும் வாய்ப்பு கிடைத்திடப் பெற்றுள்ளனர். இவர்களுடைய உயர்கல்விக்காக ஒவ்வொரு மாணவருக்கும் உதவித் தொகையாக 5 ஆயிரம் ரூபாய் வீதம்; மொத்தம் 61 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்குக் கூடுதலாக தேவைப்படும் 11 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாயை நன்கொடையாக காசோலை மூலம் இன்று(26.10.2009) முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கியுள்ளதையும் சேர்த்து; மொத்தம் 61 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் முதல்வர் கலைஞர் அவர்கள் சார்பாக அருந்ததிய மாணவர்களின் உயர்கல்விக்காக வழங்கப்பட்டது.

*****

வெளியீடு இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9